2013 மே 13]

(ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*